# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 376/மா/2025

**நாள்: 09.04.2026**

த. பிரகாசம்,
தஞ்சாவூர். --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

தஞ்சாவூர்–2, கரந்தை அஞ்சல், ஸ்ரீரெங்கக் கொத்தன் தெரு, கதவு எண் 25A/1056 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. த. பிரகாசம் என்பவரின் 03.11.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2025 அன்று பெறப்பட்டு 376/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தஞ்சாவூர்–2, கரந்தை அஞ்சல், ஸ்ரீரெங்கக் கொத்தன் தெரு, கதவு எண் 25A/1056 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. த. பிரகாசம் என்பவர் தனது 03.11.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> “நான் தஞ்சாவூர் மாநகராட்சியில் 1971 முதல் 1981 முடிய 10 ஆண்டுகள் முடிய NMR மின் பணியாளராக PWD ஷெட்டியூல் ஆப்ரேட்டில் பணி பார்த்தேன். அரசு ஆணைப்படி பணிநிரந்தரம் செய்யப்பட்டேன். நீதிமன்ற உத்தரவுப்படி 5 ஆண்டுகள் சர்வீஸ் எடுத்துக் கொள்ளப்பட்டது. நான் S.S.L.C. வரை படித்துள்ளேன். (S.S.L.C. FAILED) தமிழ்நாடு அரசு வயர்மேன் B.லைசென்ஸ் பெற்றுள்ளேன். 1981 முதல் 1986 முடிய எனக்கு மின்பணியாளர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்காமல், கடைநிலை ஊழியருக்கான ஊதியம் வழங்கப்பட்டது. பலதடவை கேட்டும் வழங்கவில்லை. 1986–ஆம் ஆண்டு இரண்டாம் நிலை மின்பணியாளர் பதவி உயர்வு பெற்று கடந்த 30.04.2007–ல் ஒய்வு பெற்று விட்டேன். மேலும் அரசு ஆணைப்படி G.O. 338–ன்படி 1981 முதல் 2007 முடிய 26 வருடங்கள் ஊதியம் வழங்க வேண்டும். அதில் 5 வருடங்கள் கடைநிலை ஊழியர் சம்பளத்தை கழித்து மின்பணியாளர் ஊதியம் பெற்றுத் தர வேண்டுகிறேன். மேலும் உடல் நலமில்லாமல் வீட்டிலேயே இருக்கிறேன். எந்த விசாரணைக்கும் வர இயலாது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 16615/2025/எம்சிஇ2 நாள் 27.11.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“அரசாணை நிலை எண் 338 நிதித் துறை (ஊதியப்பிரிவு) நாள் 26.08.2010ன்படி 1981 முதல் 2007 முடிய ஊதிய வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள திரு. த. பிரகாசம் என்பவரின் கோரிக்கை மனு பரிசீலிக்கப்பட்டதில் மேற்கண்ட விண்ணப்பதாரருக்கு உதவி இயக்குநர் நகராட்சிகளின் ஓய்வூதிய சரி பார்ப்பு பிரிவு உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரகம் குறளகம் சென்னை அவர்களின் கடிதம் மூ.மு. எண் 23942/நஓச5/2024 நாள் 31.07.2014–ம் தேதிய கடிதத்தின்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க. எண் 3921/2014/E2 நாள் 15.06.2015–ன்படி அவரது பணி சரிபார்க்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்டு அரசாணை நிலை எண் 234 நிதித் துறை (ஊதியப்பிரிவு) நாள் 01.06.2009 மற்றும் அரசாணை எண் 297 நிதித் துறை (ஊதியப்பிரிவு) நாள் 22.07.2013–ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு ஓய்வூதியம் பெற்று வருகிறார்.

மேலும் அரசாணை நிலை எண் 338 நிதித் துறை (ஊதியப் பிரிவு) நாள் 26.08.2010–ன்படி மனுதாரருக்கு 26 வருடங்கள் ஊதியம் வழங்க வழிவகை இல்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.”

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

6. இந்நிலையில், மனுதாரர் 10.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

“நான் 1971 முதல் 1981 முடிய தஞ்சாவூர் மாநகராட்சியில் தின மின் பணியாளராக வெண்ணாறு, திருமானூர் ஆகிய இரண்டு தலைமை பம்பிங் ஸ்டேசனில் பணியாற்றி வந்துள்ளேன். தினக் கூலியாக PWD ஷெட்டியூல் ஆப் ரேட்டில் சம்பளம் பெற்றுள்ளேன். இதற்கிடையில் ஒரே பணியில் பத்து வருடங்கள் பணி (NMR) செய்தால் அவரை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. மேலும் பத்து வருட சர்வீஸில் ஐந்து வருடம் எடுத்துக் கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது. 1981 முதல் 1986 முடிய தஞ்சாவூர் மாநகராட்சி மின்பணியாளர் சம்பளம் கொடுக்காமல் கடைநிலை ஊழியருக்கான சம்பளம் வழங்கி உத்தரவிட்டது. பலவருடங்கள் மனு செய்தும், நேரிலும் கேட்டு 1986 வருடம் மின்பணியாளர் பதவி உயர்வுப் பெற்று சம்பளம் பெற்றேன். கடந்த 36 வருடங்கள் மின்பணியாளர் வேலைப் பார்த்து 2007–ல் ஓய்வு பெற்றேன். குறைந்த பென்சன் பெறுகிறேன். நான் S.S.L.C. படித்துள்ளேன். (FAILED) மின் பணியாளருக்கான (லைசென்ஸ்) பெற்றுள்ளேன். என்னுடைய S.R.–ல் தஞ்சாவூர் மாநகராட்சி பணிப் பதிவேட்டில் பார்த்தால் தெரியும். கடந்த 36 வருடங்கள் வேலைப் பார்த்து கடைசி சம்பளம் ரூ.11,000/– பெற்றேன். எனக்குப் பின்னால் வேலையில் சேர்ந்தவர்கள் இன்று ஒரு லட்சம் பெறுகிறார்கள். தகுதி உள்ள நான் தகுதி உள்ள வேலையை தினக் கூலியாக 13.50 சம்பளத்தில் பல வருடங்கள் கஷ்டப்பட்டு வேலை பார்த்து வந்திருக்கிறேன் என்பதை நினைத்தால் மனம் கஷ்டமாக உள்ளது. ஆரம்பித்திலேயே பணி நிரந்தரம் செய்து இருந்தால் பென்ஷன் கூடுதலாக வந்திருக்கும். என்ன செய்வது உனக்கு கீழே உள்ளவர்கள் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு என்ற பாடல் கேட்கிறது. தற்பொழுது எனக்கு இடுப்பு எலும்பு பாதிக்கப்பட்டு வீட்டில் பெட் ரெஸ்டில் இருக்கிறேன். தங்களை காண நேரில் வர முடியாமைக்கு வருந்துகிறேன். மன்னிக்கவும். 1971–ல் தின மின்பணியாளராக சேர்ந்து 15 வருடங்கள் கழித்து, 1986–ல் மின் பணியாளர் இரண்டாம் நிலை பணி உயர்வு பெற்றேன். 1981 to 1986 அரசு பணி நிரந்தரம் செய்ய ஆணை பிறப்பித்தும் மின் பணிகள் செய்து வரும் எனக்கு கடைநிலை ஊழியர் சம்பளம் வழங்கி மாநகராட்சி உத்தரவு வழங்கியது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு எனக்கு நீதி

வழங்கி, பணப்பயன் என்ன உள்ளதோ அதை வழங்க தஞ்சாவூர் மாநகராட்சிக்கு உத்திரவுப் பிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.''

7. எதிர்மனுதாரர் தரப்பில் தஞ்சாவூர் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் 25.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

''அரசாணை நிலை எண் 338 நிதித் துறை (ஊதியப்பிரிவு) நாள் 26.08.2010ன்படி 1981 முதல் 2007 முடிய ஊதிய வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது திரு. த. பிரகாசம் என்பவரின் கோரிக்கை மனு பரிசீலிக்கப்பட்டதில் மேற்கண்ட விண்ணப்பதாரருக்கு உதவி இயக்குநர் நகராட்சிகளின் ஒய்வூதிய சரி பார்ப்பு பிரிவு உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரகம் குறளகம் சென்னை அவர்களின் 31.07.2014 நாளிட்ட கடிதத்தின்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க. எண் 3921/2014/E2 நாள் 15.06.2015–ன்படி அவரது பணி சரிபார்க்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்டு அரசாணை நிலை எண் 234 நிதித் துறை (ஊதியப்பிரிவு) நாள் 01.06.2009 மற்றும் அரசாணை எண் 297 நிதித் துறை (ஊதியப்பிரிவு) நாள் 22.07.2013–ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு ஒய்வூதியம் பெற்று வருகிறார்.

ஆனால் மனுதாரர் கோரிய ஊதிய உயர்வு (increment) அரசாணை நிலை எண் 338 நிதித் துறை (ஊதியப் பிரிவு) நாள் 26.08.2010–ல் குறிப்பிட்டுள்ளபடி கல்வித் தகுதி தேர்ச்சி பெறாததால், மேற்கண்ட அரசாணையின்படி ஊதிய உயர்வு வழங்க வழிவகையில்லை என்ற விபரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணை நகல் மற்றும் மனுதாரருக்கு அளித்த அறிவிப்பு நகல் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பித்துள்ளேன்.''

8. முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதம், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் 1971 முதல் 1981 முடிய தஞ்சாவூர் மாநகராட்சியில் தின மின் பணியாளராக வெண்ணாறு, திருமானூர் ஆகிய இரண்டு தலைமை பம்பிங் ஸ்டேசனில் பணியாற்றி தினக் கூலியாக PWD ஷெட்டியூல் ஆப் ரேட்டில் சம்பளம் பெற்றுள்ளார் என்பதும், ஒரே பணியில் பத்து வருடங்கள் பணி (NMR) செய்தால் அவரை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆணை பிறப்பித்தது என்பதும், மேலும் பத்து வருட சர்வீஸில் ஐந்து வருடம் எடுத்துக் கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது என்பதும், S.S.L.C. வரை படித்து தேர்ச்சி பெறவில்லை என்பதும், 1986 வருடம் மின்பணியாளர் பதவி உயர்வுப் பெற்று சம்பளம் பெற்றார் என்பதும், கடந்த 36 வருடங்கள் மின்பணியாளர் வேலைப் பார்த்து 2007–ல் ஒய்வு பெற்று, குறைந்த பென்சன் பெறுவதாகவும், மனுதாரர் இடுப்பு எலும்பு பாதிக்கப்பட்டு வீட்டில் பெட் ரெஸ்டில் உள்ளதால், விசாரணைக்கு வர இயலவில்லை என்பதும், 1971–ல் தின மின்பணியாளராக சேர்ந்து 15 வருடங்கள் கழித்து, 1986–ல் மின் பணியாளர் இரண்டாம் நிலை பணி உயர்வு பெற்று, 1981 to 1986 அரசு பணி நிரந்தரம் செய்ய ஆணை பிறப்பித்தும் மின் பணிகள் செய்து வரும் தனக்கு கடைநிலை ஊழியர் சம்பளம் வழங்கி மாநகராட்சி உத்தரவு வழங்கியுள்ளது என்பதும், இதனை கருத்தில் கொண்டு தனக்கு உரிய பணப்பயன் என்ன உள்ளதோ அதை வழங்க தஞ்சாவூர் மாநகராட்சிக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் கோரிக்கை மனு பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரருக்கு உதவி இயக்குநர், நகராட்சிகளின் ஒய்வூதிய சரி பார்ப்பு பிரிவு, உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரகம், குறளகம், சென்னை அவர்களின் 31.07.2014 நாளிட்ட கடிதத்தின்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க. எண் 3921/2014/E2 நாள் 15.06.2015–ன்படி அவரது பணி

சரிபார்க்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண் 234, நிதித் துறை (ஊதியப்பிரிவு), நாள் 01.06.2009 மற்றும் அரசாணை எண் 297, நிதித் துறை (ஊதியப்பிரிவு), நாள் 22.07.2013–ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு ஓய்வூதியம் பெற்று வருகிறார் என்பதும், ஆனால் மனுதாரர் கோரிய ஊதிய உயர்வு (increment) அரசாணை (நிலை) எண் 338, நிதித் துறை (ஊதியப் பிரிவு), நாள் 26.08.2010–ல் குறிப்பிட்டுள்ளபடி கல்வித் தகுதி தேர்ச்சி பெறாததால், மேற்கண்ட அரசாணையின்படி ஊதிய உயர்வு வழங்க வழிவகையில்லை என்பதும் எதிர்மனுதாரரான தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், அரசாணை (நிலை) எண் 338, நிதித் துறை (ஊதியப் பிரிவு), நாள் 26.08.2010–ல் குறிப்பிட்டுள்ளபடி கல்வித் தகுதி தேர்ச்சி பெறாததால், மேற்கண்ட அரசாணையின்படி ஊதிய உயர்வு வழங்க வழிவகையில்லை என்று தஞ்சாவூர் மாநகராட்சி உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் மனுவின் மீது மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. த. பிரகாசம்,
கதவு எண் 25A/056, ஸ்ரீரெங்கக் கொத்தன் தெரு,
கரந்தை அஞ்சல்,
தஞ்சாவூர்–613 002.

(2) ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
காந்திஜி சாலை,
தஞ்சாவூர்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

15/4/26
செயலாளர்.

15/4/26